# Anode Fabricators Pvt Ltd

Innovation In Inert Metals

MMO, Platinized Ti & Nb Anodes

#48, Noothanchery, Madambakkam, Chennai – 73, India. Ph: 0091 44 22781149/1150 Fax: 22781362 Email: info@tianode.com Web: www.tianode.com


## Inter-Organizational News Letter – November 05

### MAN OF THE MONTH



**MR. K. MURUGAN – PRODUCTION**

Proved his dedication and quality in site welding

### FORECASTING 05-06

| | |
|---|---|
| Turnover | : 125% ↑ |
| Employment | : 25% ↑ |
| Profitability | : 100% ↑ |
| Modernization | : in coating Plant → |
| Rejection growth | : 100% ↓ |

### TESTIMONIALS

- **Customers:**

Up to August 05 : 148 Nos
Up to September 05 : 150 Nos

- **Performance: Sep 05**

Turnover growth : 47.18%
Employment growth: 05.17% ↓
100% Attendance : 18.97%

### MANAGEMENT

Ms. P.E. Nancy – Director
Mrs. J. Vanajambika – Director

### KEY PERSONS

Mr. M.P.V. Jeyakumar - CEO.
Mr. R. Vijaya Sai - Operation&Planning
Mr. T. Amaladhas - Stores & Plating.
Mr. T. Ramesh - Purchase.
Mr. N. Murugan - Production.
Mr. RM. Ravi Chandran - Marketing.
Mr. C. Sounder Suresh - Out Sourcing.

### ACHIEVEMENT




# For India 2020

வளர்ந்த நாடுகளிடையே பனிப்போர் முடிவடைந்துவிட்டது. (நேரடியாக மோதாமல் மறைமுகமாகத் தாக்கிக்கொள்ளுதலே பனிப்போர் ஆகும்.) ஆதலால் அவை, வளர்ந்து வரும் இந்தியா போன்ற நாடுகளின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை போடுகின்றன.

இதில் நாம் (இந்தியா) இரண்டு பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டியுள்ளது.

ஒரு புறம் அந்நாடுகள் அண்டை நாடுகளுக்கு ஆயதங்கள் வழங்குகின்றன. அணு ஆற்றல், ஏவுகனைத் திட்டங்களுக்கு இரகசியமாய் உதவி வருகின்றன. இன்னொருபுறம் நம் உள்நாட்டுத் தொழில்நுட்பத்தைப் பலவீனமாக்கும் முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகின்றன. நாம் மிகுந்த எச்சரிக்கையுடன் செயலாற்ற வேண்டும். **உள்நாட்டு தொழில்நுட்ப வளர்ச்சியும், தன்னிறைவுமே** நமது பிறச்சினைகளுக்குத் தீர்வாகும்.

போர்க்கலன்களின் பரிணாம வளர்ச்சியையும் பலவகைப் போர்முறைகளையும் இங்கு நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

மனித வரலாற்றின் ஆரம்பத்தில் நேருக்கு நேர் மனிதர்கள் போர்புரிந்தார்கள். பின்னர் *1990* ஆம் ஆண்டு வரை யுத்தம் என்பது ஆயதம் சார்ந்ததாக இருந்தது. *1990*க்கு பின்னர் புதியதோர் யுத்த வடிவம் தோன்றிற்று. அதுதான் பொருளாதார யுத்தம்.

அதாவது சந்தைச் சக்திகளைத் தத்தமது உயர்ந்த ரகத் தொழில்நுட்பம் வாயிலாகக் கட்டுப்படுத்துதல் என்பதே இதன் பொருள். எனவே இந்தக் கணக்கில் இந்தியாவிற்குத் தேவை என்பது ‘தொழில்நுட்பத்தால் ஆயத அணிவகுப்பு’.

– மாண்புமிகு குடியரசுத்தலைவர் ஏ. பி. ஜே. அப்துல் கலாம்

********

## ஒளிமயமான எதிர்காலம்

பல்லாயிரம் ரூபாய்க்கு மேல் ஒருநாள் வாடகை ஈட்டும் அழகிய பெரிய திருமண மண்டபத்தின் உரிமையாளர் அவர். திருமணம் நடக்காத ஆடி மாதத்தில் கூட எக்ஸிபிஷன் சேல்ஸ் என்று வாடகைக்கு விட்டு பணம் சம்பாதிக்கும் மண்டப உரிமையாளராக அவர் இருந்து பணம் குவிக்க முடியும். ஆனால் அவரோ மகாத்மாகாந்தி விழா, வள்ளலார் விழா, கம்பன் விழாவுக்குத் தன் மண்டபம் இலவசமாக தரப்பட வேண்டும் என்று தந்தார். தன் காலத்திற்குப் பிறகு இந்த தருமம் நின்று விடக்கூடாது என்று உயிலாகவே எழுதி வைத்துவிட்டார். மாற்றப்பட முடியாத நிபந்தனையாகவே மண்டபத்தின் தலையெழுத்தாகவே அதனை ஆக்கிவிட்டார்.

இந்தக் கொடை உணர்வு மிக்க அமரர் A.V.M என்ற புகழ் பெற்ற மெய்யப்ப செட்டியார் தன் பிடிமானத்தில் இருந்த பாரதி பாடல்களின் காப்புரிமையைத் தேசத்துக்கு இலவசமாகவே தந்தார். ஆனால் இந்த கொடையாளியின் கடைசிப்பேச்சு என்ன தெரியுமா? மருத்துவமனையில் உயிர் பிரியுமுன் அவர் சொன்ன வார்த்தை “அந்த பாத்ரூம்ல லைட் வீணா எரியுதேப்பா, அதை ஆஃப் பண்ணுங்க” என்றுதான். லட்சம் லட்சமாகக் கொடுக்க முடிந்த ஒருவர் ஒரு ரூபாய் சிக்கனம் பற்றி ஏன் யோசித்தார் என்பது யோசிக்கவேண்டிய விஷயம்.

அவசியமானால் எத்தனை லட்சம் வேண்டுமானாலும் செலவு செய்யலாம். ஆனால் அவசியம் இல்லாமல் பத்து பைசா கூட வீணாக விரயமாகச் செலவாகக் கூடாது.

சொல்வேந்தர் சுகிசிவம்

... 2

## FUNCTIONAL WISHES



**Deepawali - November 01**

Best Wishes by Ti Employees.

## EXTERNAL SUPPORT

| | |
|---|---|
| Banking | : M/s. United Bank of India Ltd |
| Auditing | : M/s. Nisar & Kumar |
| AQ Auditing | : M/s. Juran Quality |
| Legal Advisers | : 1] Lr. V. Benedict Vincent.<br>2] Lr. M.K. Govindan. |
| Software | : M/s. IndSys Technologies |

## மகிழ்ச்சியை வெல்வது எப்படி?

**சிந்தனை முறையை மாற்றுங்கள்**

ஒவ்வொரு நாளையும், அதுவே வாழ்வின் கடைசிநாள் என்பது போல் எண்ணிக்கொண்டு வாழ்ந்து பாருங்கள்.

கொடிய நோய்வாய்பட்டு மீண்டவர்கள், பயங்கரமான விபத்திலிருந்து தப்பியவர்கள், கோரமான ஒரு நிகழ்ச்சியை நேரில் கண்டவர்கள், உயிருக்கு மேலாக நேசித்தவர்களை மரணதேவனிடம் இழந்தவர்கள், இவர்கள் அனைவருமே வாழ்க்கையை முற்றிலும் புதிய கோணத்திலிருந்து பார்க்கிறார்கள். நாளைக்கு என்று எதையும் ஒத்திப் போடுவதில்லை இவர்கள். இன்றே, இங்கேயே, இப்பொழுதே என்பது அவர்கள் கொள்கை முழக்கம்!

**நாட்குறிப்பு எழுதுங்கள்!**

அன்றாடம் நடைபெறும் நல்ல விஷயங்களை இரவு தோறும் எழுதுங்கள் எல்லாவற்றையும் நினைவில் வைத்திருக்கத் தேவையில்லை. நாட்குறிப்பு எழுதும் பழக்கத்தினால் பிரச்சனைகள் சில தாமாகவே தீர்கின்றன. மனத்தின் அடித்தளத்தில் உறுத்தும் தீய நினைவுகள் தீய்ந்து போகின்றன. எழுதிப்பாருங்கள் விரைவில் பலன் தெரியும்!

தொடரும்...

## இன்னும் கொஞ்சம்

விட்டுக் கொடுங்கள்!
வாய்ப்புக் கொடுங்கள்!
நம்பிக்கை கொடுங்கள்!
நம்பிக்கை பெறுங்கள்!

## BIRTH DAY WISHES



| | | |
|---|---|---|
| Mr. A. Johnson | - Production | - Nov 03 |
| Mr. A. Mohan | - Engr – MSE | - Nov 10 |
| Mrs. M. Malathi | - W/o. K. Murugan | - Nov 12 |
| Mrs. L. Mohana | - W/o. C. Lakshmipathy | - Nov 18 |
| Baby T.R. Varshika | - D/o. T. Ramesh | - Nov 21 |
| Mr. D. Kingston | - Sr. Asst Liasion | - Nov 30 |

**எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான்**
**மண்ணில் பிறக்கையிலே!**
**அவர் நல்லவராவதும் தீயவராவதும்**
**அன்னை வளர்ப்பினிலே!!**

**Best Wishes by Ti Employees.**

## ஊஞ்சல்

தொப்புள் கொடியில் தொடங்கும் ஊஞ்சல்!
தொட்டில் கயிற்றில் வளரும் ஊஞ்சல்!
பள்ளிப் படிப்பில் புத்தக ஊஞ்சல்! – இவற்றில்
பாதை தவறினால் பேதமை ஊஞ்சல்...!

பறக்கும் வயதில் காதல் ஊஞ்சல்!
உழைக்கும் வயதில் ஊதிய ஊஞ்சல்!
மணக்கும் வயதில் மனைவி ஊஞ்சல்!
இன்பம், துன்பம் மறையா ஊஞ்சல்! – இவற்றில்
பாதை தவறினால் கண்ணீர் ஊஞ்சல்!

– செ. ரஞ்சித்.
Erection & Commissioning

சிறுகதைகள், துணுக்குகள்
கவிதைகள், கட்டுரைகள்
பணியாளர்கள் மற்றும் குடும்ப
உறுப்பினர்களிடமிருந்து
வரவேற்கப்படுகிறது.
– **Editor**

********

## மலரும்முன் மணம்வீசும் மொட்டு

அந்த சிறுவனுக்கு ஐஸ்க்ரீம் பிடிக்கும். ஐஸ்க்ரீம் பார்லருக்குப் போய், “கஸாட்டா ஐஸ்க்ரீம் எவ்வளவு?” என்று கேட்டான். “இருபத்தைந்து ரூபாய்” என்றார் பணிப்பெண். கையிலிருந்தக் காசை எண்ணிப் பார்த்துவிட்டு “வெனிலா ஐஸ்க்ரீம் எவ்வளவு?” என்று கேட்டான். “இருபது ரூபாய்” என்று பதில் வந்தது. “வெனிலா ஐஸ்க்ரீம் போதும்” என்று வாங்கி, ஒரு நாற்காலியில் அமர்ந்து சாப்பிடத் தொடங்கினான். “இருபது ரூபாய்தான் வைத்திருப்பான் போலிருக்கிறது” என்று நினைத்தப் பணிப்பெண், பில் கொண்டுவந்துக் கொடுத்தார். பையன் போனபிறகு பில் பணத்தை எடுக்க வந்த பணிப்பெண் அழத்தொடங்கினார்.

பையனிடம் இருபத்தைந்து ரூபாய் இருந்தது பணிப்பெண்ணுக்கு டிப்ஸ் வைக்க வேண்டும் என்பதற்காக “கஸாட்டா” ஆசையைத் தியாகம் செய்துவிட்டு, ஐந்து ரூபாய் டிப்ஸ் வைத்துவிட்டுச் சென்றிருக்கிறான் அந்தச் சிறுவன்.

இப்படித்தான் சில அரும்புகள், மொட்டுவிடும் முன்பே மணம் வீசத் தொடங்குகின்றன.

– மரபின் மைந்தன் ம.முத்தையா

********

வெற்றியின் ரகசியங்கள் மூன்று. தயார்படுத்துதல், தளராமல் உழைத்தல், தோல்வியில் இருந்து பாடம் பெறுதல்.

– காலின் போவல்

********

**POOJA CELEBRATION**

